FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்றவிசாரணை முறை சட்டம் 154-இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040857

1. District : மாவட்டம் | PS: காவல்நிலையம் | Year: ஆண்டு 2025 | FIR No.: முதல் அ. எண் 06/2025 | Date: நாள் 27.12.2025

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(b)

(iii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 28.11.2025 | Date to : நாள் வரை 23.12.2025 / மாலை 12.35 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 08.12.2025 | Time to : நேரம் வரை 24.12.2025 / காலை 11.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.12.2025 | Time : நேரம் 18.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் பெறப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பேராசிரியர் வீடு அலுவலகம் காரில் 35 நிமி வட மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible] | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் [illegible] | (g) Address : முகவரி 165, நடுத்தெரு, மலம்பட்டி, காளையமலை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ஆண்டியப்பன், நிர்வாக அலுவலர், பேராசிரியர் வீடு, காளையமலை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நகல் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27.12.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு A அருணாசலம்

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27-12-2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
27.12.2025

Name: பெயர் J. [illegible]
Rank: நிலை .....No. எண் .....
காவல் அய்வாளர்,
[illegible] காவல், [illegible]

Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.06/2025

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 26.12.2025–ஆம் தேதி மாலை 18.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது அருளாந்து, 42/2025, த/பெ,ஆரோக்கியசாமி, 165, நடுத்தெரு, மலம்பட்டி, விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப் செய்த ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர், அருளாந்து, 42/2025, த/பெ, ஆரோக்கியசாமி, 165, நடுத்தெரு, மலம்பட்டி, விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புப் பிரிவு, புதுக்கோட்டை மாவட்டம், அய்யா, நான் குடும்பத்துடன் மலம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு இன்னாசிமுத்து என்ற அண்ணனும், பிரான்சிஸ் சேவியர் என்ற தம்பியும் அமிர்தம் (எ) சவரி அம்மாள் என்ற அக்காவும் உள்ளனர். எங்கள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. எனது அக்கா மட்டும் உடையான்பட்டியில் வசித்து வருகிறார். அண்ணன் தம்பி நாங்கள் மூவரும் மலம்பட்டியில் வசித்து வருகிறோம். என்னுடைய அம்மா சவரி அம்மாள் என்னுடன் வசித்து வருகிறார். எனது அப்பா ஆரோக்கியசாமி எனது தம்பி பிரான்சிஸ் சேவியருடன் வசித்து வருகிறார். எனது அம்மாவை நான் பராமரித்து வருவதால், எனது அப்பா அவருக்குச் சொந்தமான பேராம்பூர் சர்வே எண் 144/7H3ல் உள்ள 34.50 ஏர்ஸ் புன்செய் நிலத்தையும், சர்வே எண் 501/41ல் உள்ள 0.75 ஏர்ஸ் மற்றும் சர்வே எண் 501/42ல் உள்ள 1.50 ஏர்ஸ் வீட்டுமனைகளையும், சர்வே எண் 144/7H2ல் உள்ள 5.50 ஏர்ஸில் உள்ள கிணறுடன் கூடிய புன்செய்யில் 3ல் 1 பங்கும் 13.11.2025ம் தேதி எனக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்தார். அந்த தானசெட்டில்மெண்ட் விராலிமலை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 7304/2025ன்படி எனது பெயரில் பதிவு செய்யப்பட்டது. மேலே சொன்ன நிலங்களில் புல எண் 144/7H3ல் உள்ள 34.50 ஏர்ஸ் புன்செய் நிலத்திற்கு பட்டா மாறுதல் ஆகிவிட்டது. அதன்பிறகு நவம்பர் மாதம் நான்காம் வாரத்தில் ஒரு நாள் பேராம்பூர் VAO திரு.ஜான் அருளப்பன் எனக்கு போன் செய்து மேற்படி நிலங்களுக்கான பத்திரத்தின் நகலைக் கொண்டு வந்து தருமாறு கூறினார். நான் கடந்த 28.11.2025ம் தேதி சுமார் 12.00 மணிக்கு பேராம்பூர் VAO அலுவலகம் சென்று, ஆவண எண் 7304/2025ன் பத்திர நகலை VAO திரு.ஜான் அருளப்பனிடம் கொடுத்தேன். அப்போது அவர், வீட்டுமனைகள் மற்றும் கிணறு உள்ள இடங்களுக்கு உட்பிரிவு பட்டா வழங்க வேண்டும். பத்திரத்தில் கூறியுள்ள உங்கள்

புன்செய் நிலத்திற்கு ஏற்கனவே பட்டா மாறுதல் செய்துள்ளேன். ஏற்கனவே பட்டா மாறுதல் செய்து கொடுத்த ஒரு இடத்துக்கும், இனி மூன்று இடங்களுக்கு பட்டா மாறுதல் செய்வதற்கும் சேர்த்து ரூ.6,000/– எனது செலவுக்கு கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான், என்னிடம் தற்போது பணம் இல்லை, வேலையை முடியுங்கள், அப்புறம் பார்த்துக்கலாம் என்று சொல்லிவிட்டு வந்தேன். அதன்பிறகு VAO திரு.ஜான் அருளப்பன் அடிக்கடி எனக்கு போன் செய்து கொண்டிருந்தார். அவர் பணம் கேட்பார் என்பதால் நான் அவரது போனை எடுக்கவில்லை. அவர் அடிக்கடி போன் செய்ததால், நான் கடந்த 08.12.2025ம் தேதி VAO திரு.ஜான் அருளப்பனை எனது பட்டா மாறுதல் சம்மந்தமாக பேராம்பூர் VAO அலுவலகத்திற்குப் போய் பார்த்தேன். அப்போது அவர் என்னிடம், உங்கள் வேலை சீக்கிரம் முடிஞ்சிரும், நான் கேட்ட பணம் ரூ.6,000/–ஐ கொண்டு வந்திருக்கிறீர்களா, கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் பட்டாவுக்கான வேலையை செய்து முடியுங்கள், அப்புறம் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு கடந்த 19.12.2025ம் தேதி கிணறு இருக்கும் நிலம் மற்றும் இரண்டு வீட்டுமனைகள் ஆகியவற்றிற்கு பட்டா மாறுதல் ஆகிவிட்டது. அதன்பிறகு VAO திரு.ஜான் அருளப்பன் எனக்கு அடிக்கடி போன் செய்து கொண்டிருந்தார். பணம் கேட்பார் என்பதால் நான் போனை எடுக்கவில்லை. கடந்த 23.12.2025ம் தேதியும் இரண்டு தடவை போன் செய்தார். நான் எடுக்கவில்லை. அதன்பிறகு சுமார் 12:35 மணியளவில் நான் VAO திரு.ஜான் அருளப்பனுக்கு போன் செய்தேன். அப்போது, என்ன போன் செய்தால் எடுக்க மாட்டேங்குறீங்கனு கேட்டார். அதற்கு நான் வேலையாக இருந்ததால் கவனிக்கல என்று சொன்னேன். அதற்கு அவர் உங்க நிலங்களுக்கு பட்டா மாறுதல் செய்து கொடுத்தாச்சு, அதற்காக நான் கேட்ட பணம் ரூ.6,000/–ஐ நீங்கள் இன்னும் கொடுக்கவில்லை. உடனே பணத்தைக் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அதற்கு நான் தற்சமயம் என்னிடம் பணம் இல்லை, பணத்தை பெரட்டிகிட்டு சொல்றேனு சொன்னேன். அதற்கு சீக்கிரம் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். நான் அதற்கு பதில் ஒன்றும் சொல்லாமல் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகும், VAO திரு.ஜான் அருளப்பன் அடிக்கடி போன் செய்து அவரது அலுவலகத்திற்கு வந்து பார்க்கச் சொன்னார். அதனால், நான் கடந்த 24.12.2025ம் தேதி பகல் சுமார் 11:30 மணிக்கு பேராம்பூர் VAO அலுவலகத்திற்கு நேரில் சென்று VAO திரு.ஜான் அருளப்பன் என்பவரை சந்தித்தேன். அப்போது அவர் நீங்க 6,000/– ரூபாய் தருவீங்கன்ற நம்பிக்கையிலதான் பட்டா மாற்றி கொடுத்தேன். ஆனால், பணம் கொடுக்காம இழுத்தடிக்கிறீர்கள். வேலை முடிஞ்சதுனு நெனைக்கிறீர்களா? எல்லா வேலைக்கும் என்கிட்டதான் வரனும், ஒழுங்கா நான் கேட்ட பணத்தை கொடுங்க, இல்லாட்டி நான் என் வேலையை காண்பிப்பேனு சொன்னார். அதற்கு நான், என்னிடம்

இப்போ பணம் இல்லை, பணம் பெரட்ட முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு VAO திரு.ஜான் அருளப்பன் வருகிற சனிக்கிழமை தான் கடைசி நாள், அன்னைக்கு அவர் தனது செலவுக்கு கேட்ட பணம் ரூ.6,000/–ஐ கொண்டுவந்து கொடுங்கள் என்று சொன்னார். நான், ஒன்றும் பேசாமல் திரும்பி வந்துவிட்டேன். எனது நிலங்களுக்குப் பட்டா மாறுதல் செய்து கொடுத்ததற்காக VAO திரு.ஜான் அருளப்பன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னுடைய நிலங்களுக்கு பட்டா மாறுதல் செய்து கொடுத்ததற்கு சன்மானமாக ரூ.6,000/– லஞ்சமாக கேட்ட VAO திரு.ஜான் அருளப்பன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தங்களிடம் இந்த புகார் மனுவைக் கொடுக்கிறேன். VAO கேட்ட பணம் ரூ.6,000/–மும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்)/ கி.அருளாந்து, 26.12.2025.

Sir, Received the above computer typed complaint on 26.12.2025 at 18.30. The genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.06/2025 u/s 7 (b) of Prevention of Corruption Amendment Act-2018 at 07.00 hrs today on 27.12.2025 and took up for investigation. (Sd-) J.Jawahar, Inspector of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer typed complaint of Tr.A.Arulandhu, S/o Arokiyasamy, No.165, Nadutheru, Malampatti, Viralimalai Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble District Principal Sessions Judge for trial cases under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

27.12.25

(J. JAWAHAR)
Inspector of police,
V&AC, Pudukkottai.